**கோயம்புத்தூர் வணிக வழக்குகள் நீதிமன்றம் (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர்**

**COS.No. 18 of 2024**

**2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16ம் நாள் செவ்வாய்க்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் திரு.கி.ஹரிகரன், எம்.எல்., நீதிபதி, வணிக வழக்குகள் நீதிமன்றம், (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | PW2- திரு.அசோக் பிரபு | **கிராமம்:** | |
| **த.பெ.** | S.M.Natarajan | **வேலை:** | |
| **வயது** | 43 | **செல்போன் எண்** | |

**<u>முதல் விசாரணை:</u>**

**என் பெயர் அசோக் பிரபு, வயது 43, த/பெ.S.M.நடராஜன். நான் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி பத்திரத்தில் உள்ள வாசகங்கள் உண்மை என்றும், சரி என்றும் உறுதியளிக்கிறேன். அதை என் தரப்பு முதல் விசாரணையாக தாக்கல் செய்கிறேன். ஆவணங்கள் இல்லை.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**நான் ITI Electrical படித்துள்ளேன்.**

**என்னுடைய நிறுவனத்தின் பெயர் Sun Associate. எங்கள் நிறுவனம் Panel Board Manufacturing தொழில் செய்கிறது.**

**Panel Board Manufacturing தொழில் செய்து வருவதாக இந்நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை, எனவே நீங்கள் கூறுவது போல் தொழில் செய்து வரவில்லை என்று**

சொன்னால் வேண்டுமென்றால் நான் ஆவணங்கள் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன்.

வாதியின் சார்பாக இவ்வழக்கில் நீங்கள் சாட்சியம் அளிக்க முன்வந்துள்ளீர்கள், இந்த வழக்கின் விபரங்கள் உங்களுக்குத் தெரியுமா என்றால் வாதி ஒரு நிறுவனத்திற்கு எந்திரங்கள் அனுப்பியுள்ளார், அவ்வாறு அவர்கள் அனுப்பியுள்ள எந்திரங்களுக்கு நான் panel board supply செய்துள்ளேன், அதற்காக ஒரு payment எங்களுக்கு வரவில்லை, அதுகுறித்து இவ்வழக்கு நடக்கிறது என்று வந்துள்ளேன்.

இந்த வழக்கில் நீங்கள் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் யாரால் எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் வாதியின் வழக்கறிஞர் தயாரித்தார்.

இந்த வழக்கின் விபரங்கள் உங்களுக்கு முழுமையாக தெரியாது வாதியின் வழக்கறிஞர் உங்களிடம் தெரிவித்ததன் அடிப்படையில் தான் இவ்வழக்கில் நீங்கள் சாட்சியமளிக்க வந்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான்.

பிரதிவாதி நிறுவனத்தில் எந்திரங்கள் நிறுவுவதற்காக உங்கள் நிறுவனத்திற்கு subcontract purchase order கொடுக்கப்பட்டதாக உங்களுடைய நிரூபண வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது, அவ்வாறு எந்த தேதியில் யாரால் உங்களுக்கு purchase order கொடுக்கப்பட்டது என்று சொன்னால் VME அலுவலகத்திலிருந்து எங்களுக்கு purchase order கொடுக்கப்பட்டது, தேதி தெரியவில்லை.

அந்த purchase order– ஐ இவ்வழக்கில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் சரிபார்க்கிறேன், இருந்தால் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன்.

Purchase order அடிப்படையில் நீங்கள் வேலை செய்ததற்கான இன்வாய்ஸ்களை வாதி நிறுவனத்திற்கு எந்த தேதியில் கொடுத்தீர்கள் என்றால் 2021 ஆம் ஆண்டு, தேதி, மாதம் தெரியவில்லை.

வாதி நிறுவனம் நீங்கள் கொடுத்த இன்வாய்ஸ்களுக்கு எவ்வளவு தொகை, எவ்வாறு செலுத்தினார்கள் என்று சொன்னால் வங்கி மூலமாக தொகை செலுத்தினார்கள், எவ்வளவு தொகை செலுத்தினார்கள் என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை, ஆவணத்தைப் பார்த்தால் தான் கூற முடியும்.

வாதி நிறுவனத்தால் உங்களுக்கு வழங்கிய இன்வாய்ஸ்களையும், வாதி நிறுவனத்தால் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட தொகைகளுக்கான வங்கி கணக்கு அறிக்கைகளையும் இவ்வழக்கில் உங்களால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் சரி பார்த்து விட்டு தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன்.

வாதி நிறுவனம் உங்களுக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எந்த purchase order ம் கொடுக்கவில்லை, நீங்கள் வாதி நிறுவனத்திற்கு எந்த இன்வாய்ஸ்–ம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, நான் இன்வாய்ஸ் வாதி நிறுவனத்திற்கு பணிகளுக்காக வழங்கி இருக்கிறேன்.

பிரதிவாதி நிறுவனத்தில் நீங்கள் எந்திரங்களை அனுப்பி சோதனை ஓட்டம் முழுமையாக செய்து கொடுக்கவில்லை, தற்போது வாதிக்கு ஆதரவாக இவ்வழக்கில் சாட்சியமளிக்க முன்வந்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல, சோதனை ஓட்டம் செய்து கொடுத்துள்ளேன்.

பிரதிவாதி நிறுவனம் எந்த ஊரில் இருக்கிறது என்றால் ஹிமாச்சல் பிரதேசத்தில் உள்ளது.

ஹிமாச்சல் பிரதேசத்தில் எந்த ஊர் என்றால் பத்தி என்ற ஊர்.

அந்த இடத்திற்கு எவ்வாறு சென்றீர்கள் என்றால் ரயிலில் சென்றேன்.

ரயிலில் எந்த எந்த ஊர்கள் வழியாக சென்றீர்கள் என்றால் டெல்லிக்கு சென்று, அங்கிருந்து சண்டிகர் சென்று, சண்டிகரில் இருந்து அந்த ஊருக்கு சென்றேன்.

பிரதிவாதி நிறுவனத்திற்கு நீங்கள் சென்றதற்குரிய ஆவணங்களை உங்களால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் 2021 ஆம் ஆண்டு சென்றதால் அதற்குரிய ஆவணங்களை நான் பராமரிக்கவில்லை.

பிரதிவாதி நிறுவனத்திற்கு நீங்கள் செல்லவும் இல்லை, பிரதிவாதி நிறுவனத்தில் எந்திரங்களை நிறுவி சோதனை ஓட்டமும் செய்து கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

உண்மையில் நீங்கள் சென்றிருந்தால் பிரதிவாதி நிறுவனத்தில் எந்திரங்களை சோதனை ஓட்டம் செய்து கொடுத்ததற்குரிய ஆவணங்களையும், பிரதிவாதி நிறுவனத்திற்கு இமாச்சலப் பிரதேசத்திற்கு நீங்கள் சென்றதற்குரிய ஆவணங்களையும் தாக்கல் செய்திருப்பீர்கள், அவ்வாறு இல்லாததால் தான் இவ்வழக்கில் அந்த ஆவணங்களை நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Purchase order ல் உள்ளவாறு வாதி நிறுவனம் பிரதிவாதி நிறுவனத்திற்கு என்னென்ன எந்திரங்களை எவ்வாறு நிறுவி கொடுக்க வேண்டும் என்ற முழு விவரங்களும் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது.

Purchase order ன் அடிப்படையில் வாதி நிறுவனம் பிரதிவாதி நிறுவனத்திற்கு எந்திரங்களை நிறுவி கொடுக்கவில்லை, அவ்வாறு

நிறுவி கொடுத்ததாக நீங்கள் கூறுவது பொய்யானது என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் முதல் விசாரணையில் தெரிவித்துள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல.

உங்களுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை நிறைவுற்றது.

Sd/–K.Hariharan

Judge,
Commercial Court
(District Judge Cadre),
Coimbatore.